**SL. No. : DD**

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 64 ]
Total No. of Questions : 64 ]

# CCE PR

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8
[ Total No. of Printed Pages : 8

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T** **Code No. : 10-T**

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು
## Subject : First Language — TAMIL
**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Repeater )**

ದಿನಾಂಕ : 15. 06. 2017 ] [ Date : 15. 06. 2017

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–12-45 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 64-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலது கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஓட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

## பகுதி அ

I. ஒரு தொடரில் விடை தருக : $16 \times 1 = 16$

1. நீ எத்தகைய "எண்ணத்தைக் கூடு" என்கிறார் நாமக்கல் கவிஞர் ?
2. மதுரைச் சொக்கநாதன் மண்ணைச் சுமந்ததன் காரணம் என்ன ?
3. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இருவகையினர் யாவர் ?
4. சூரியன் மறையும் காட்சியை ஆசிரியர் எவ்வாறு வருணிக்கிறார் ?
5. தமிழர்களைப் பழித்த வடவரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
6. இளையான்குடி மாற நாயனார் எதனைத் திருப்பணியாகச் செய்து வந்தார் ?
7. பம்ப பாரதத்திற்கு பம்பன் இட்ட பெயர் என்ன ?
8. நக்கீரர் சங்கப் புலவர்களைப் பிரியும்போது கூறியவை யாவை ?
9. இன்றைய இளைஞன் எவற்றை இடறிவிட வேண்டும் ?
10. ஈரோடு தமிழன்பன் முரண்படும் பழமொழி யாது ?
11. மனித யந்திரங்கள் எவற்றை நோக்கமாகக் கொண்டவர்கள் ?
12. முல்லை நிலம் சிறந்து காணப்படும் காலம் எது ?
13. திரு. வி.க. சொற்பொழிவை எவ்வாறு நிகழ்த்துவார் ?
14. தொடை என்றால் என்ன ?
15. இன்றைய பெரும் கவலையாக தென்கச்சியார் என்ன கூறுகிறார் ?
16. அணி என்றால் என்ன ?

II. பின்வரும் வினாக்களுக்கு மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : $16 \times 2 = 32$

17. சங்கத் தலைவி எவ்வாறு சமைத்தாள் ?
18. C.F.C. ஓசோனில் ஏற்படுத்தும் பாதிப்பு யாது ?
19. "பிசி", "புதிர்" ஆகிய சொற்களை விளக்குக.
20. உடலுக்கும் செவிக்கும் இன்பத்தைத் தரவல்லவை எவை ?

21. தீப்பெட்டி ஆபீஸில் இருந்து திரும்பிய பஸ்கள் எவ்வாறு குழந்தைகளை வெளியே தள்ளின ?

22. சூளுரைத்த செங்குட்டுவனை நோக்கி ஆசான் யாது கூறினார் ?

23. அடுக்குத் தொடரை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

24. பெண்கள் எவ்வாறு கும்மியடித்தனர் ?

25. பேராசிரியர் சேதுப்பிள்ளையின் உரையாடல் எவ்வாறு இருக்கும் ?

26. வேதநாதனின் தோற்றம் மிகச் சிறந்து காண்பதற்கான காரணம் பற்றி எழுதுக.

27. அரக்கியர் சூழ இருந்த சீதையின் நிலையைக் கம்பர் எவ்வாறு வருணிக்கிறார் ?

28. ஆரவல்   க் குன்றின் சரிவில் உள்ள கோயில் பற்றி எழுதுக.

29. சேக்ஸ்பியர் உரையாடல் கலை எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என்கிறார் ?

30. தமிழ் நாட்டரசர்களைப் பழித்த ஆரிய மன்னர்களுக்கு எதிராகச் செங்குட்டுவன் உரைத்த சூளுரையினைக் கூறுக.

31. இரட்டைக்கிளவி என்றால் என்ன ?

32. ஆகுபெயர் என்றால் என்ன ?

III. பின்வரும் வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : $11 \times 3 = 33$

33. "ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்" என்ற பழமொழியை விளக்குக.

34. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளை எழுதுக.

35. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை ?

36. வெண்பாவின் பொது இலக்கணம் கூறுக.

*அல்லது*

அடியின் வகைகளை விளக்குக.

37. இயல்பு கவிதை உரைக்கும் கருத்துகளை எழுதுக.

38. வேற்றுமை அணியை விளக்குக.

இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

39. "குழி நிரம்பாத புன்செய்

குறும்பயிர் தடவி"

40. "தெருக்களில் பாண்டி விளையாடக் கூட ஒரு பெண் பிள்ளையைக் காணோம்"

41. "வந்தவர் போனவர் யாரையும் நம்பி, வாடின காலங்கள் ஓடின தம்பி"

42. "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

43. "எம் தமிழ்ப் பாவையைச் சுமந்து செல்லுங்கள்"

IV. பின்வரும் வினாவுக்கு எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக: $3 \times 4 = 12$

44. பாரதிதாசன் "எங்கள் தமிழ் மொழி" என்று பாராட்டும் சிறப்பினை எழுதுக.

*அல்லது*

எல்லா குணங்களையும் சீர்மையடையச் செய்தவள் சீதை என்பதை விளக்குக.

45. சேதுப்பிள்ளையவர்கள் "இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்" என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விவரி.

*அல்லது*

இலட்சியம் பற்றி வைரமுத்து கூறும் கருத்துகளைச் சுருக்கி வரைக.

46. கிராமத்தின் மாலை நேரக் காட்சிகளை கி. ராஜநாராயணன் எவ்வாறு விளக்குகிறார் ?

*அல்லது*

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விவரி.

V. அடிபிறழாமல் எழுதுக : $1 \times 4 = 4$

47. "சோதியாய்த் தோன்றும் ...." என வரும் திருவாசகப் பாடல்.

*அல்லது*

"ஈன்று புறந்தருதல் ....' என வரும் புறநானூற்றுப் பாடல்.

VI. 48. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக : 4 × 1 = 4

டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் முதன்முத ல் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவர் திருக்குறளை உலக அறிஞர்கள் அறியுமாறு உலக நாடுகளுக்கு அறிமுகப்படுத்தினார். இரஷிய அறிஞர் ' யோ டால்ஸ்டாய்', ஜெர்மானிய அறிஞர் ஆல்பர்ட் சுவைட்டர் போன்றோர் திருக்குறளால் ஈர்க்கப் பெற்றவர்கள் ஆவர். தமிழ் இலக்கியத்தில் மிகப்பெரிய சாதனை படைத்த படைப்பிலக்கியம் திருக்குறள் என்று பிரெஞ்சு அறிஞர் எம். அரியல் பாராட்டியுள்ளார்.

வினாக்கள்:

i) திருக்குறளை முதன்முத ல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார் ?

ii) ஜெர்மானிய அறிஞர் யார் ?

iii) எம். அரியல் திருக்குறளை எவ்வாறு பாராட்டியுள்ளார் ?

iv) உலக அறிஞர்களால் பாராட்டப்படும் நூல் எது ?

**பகுதி ஆ**

VII. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமை பெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். 10 × 1 = 10

49. ஆசிரியப்பாவின் ஓசை ........................................ .

(A) செப்பல் (B) அகவல்

(C) விரவல் (D) கேவல்.

50. "போருழந் தெடுத்த ஆரெயில்
நெடுங்கொடி வாரல் என்பன போல்
மறித்துக் கைகாட்ட"

இதில் இடம் பெற்றுள்ள அணி ........................................ .

(A) வேற்றுமையணி (B) உவமையணி

(C) தற்குறிப்பேற்ற அணி (D) சிலேடையணி.

51. பகைவரின் மதிலை முற்றுகையிட்டு வெற்றி கொள்ளுதல் .......................................... .

(A) வெட்சி (B) வஞ்சி

(C) உழிஞை (D) தும்பை.

52. "கடகடவென வண்டி ஓடியது"

இத்தொடரில் கடகட என்பது .......................................... .

(A) இரட்டைக்கிளவி (B) வேற்றுமை

(C) அடுக்குத்தொடர் (D) ஆகுபெயர்.

53. 'அன்னைக்கு ஆபீசுக்கு லீவு விடுவாங்களா சார் ?'

இது ............................... .

(A) வியப்புத் தொடர் (B) வினாத் தொடர்

(C) வேற்றுமைத் தொடர் (D) விளித்தொடர்.

54. "வட்ட வடிவாள் வரவரத் தேய்வாள் முற்றும் மறைவாள் அவள்" .......................................... .

(A) நிலவு (B) சூரியன்

(C) விண்மீன் (D) மேகம்.

55. "காஞ்சிபுரம் வாங்கினாள்"

இத்தொடரில் வரும் ஆகுபெயர் .......................................... .

(A) பண்பாகு பெயர் (B) பொருளாகு பெயர்

(C) இடவாகு பெயர் (D) காலவாகு பெயர்.

56. இருபொருள் தரும் சொல் .......................................... .

(A) மரம் (B) மடி

(C) கடல் (D) மலை.

57. நான்கு சீர்களைக் கொண்டது .......................................... .

(A) குறளடி (B) சிந்தடி

(C) நெடிலடி (D) அளவடி.

58. பைந்தமிழ் .......................................... .

(A) பை + தமிழ் (B) பசு + தமிழ்

(C) பசுமை + தமிழ் (D) பைந் + தமிழ்.

VIII. தொடர்புபடுத்தி எழுதுக: $4 \times 1 = 4$

59. கம்ப்யூட்டர் : கணினி

இன்டர்நெட் : ..................................................... .

60. இளக்கண நூல் : இலக்கண நூல்

இயற்கையளகு : ................................. .

61. ஒன்றாம் தேதி மட்டும் உறங்காதவன் : அரசாங்க ஊழியன்

தும்மிக் கொண்டே ஜலதோஷத்திற்கு மருந்து கொடுப்பவன் : ................................................... .

62. அழகு, அறிவு : மோனைத் தொடை

முற்பகல், பிற்பகல் : ............................................. .

## பகுதி இ

IX. 63. உன் எதிர்காலத் திட்டம் குறித்து உன் நண்பனுக்கு மடல் வரைக. $1 \times 5 = 5$

*அல்லது*

ஏதேனும் ஒரு புத்தகக் கடைக்கு விளம்பரப் பதாகை தயார் செய்க.

X. 64. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை வரைக: $1 \times 5 = 5$

i) மழைநீர் சேகரிப்பு

ii) உலகம் வெப்பமயமாதல்

iii) மாணவரும், இணைய தளமும்.